Starting of a Co-operative Milk Producers Union at Sarukkai Village.

* Q. No. 647—THIRU. S. RAJARAMAN : Will the Hon. the Minister for Rural Industries be pleased to state :

(a) whether any representation has been received from milkmen of Sarukkai Village in Papanasam Taluk in Tanjore Distric by the Office of the Milk Deputy Commissioner contonment Tiruchirappalli during July 1980 for starting a Co-operative Producers Union : and

(b) the action taken in this regard ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) ஆம்.

(ஆ) சருக்கை கிராமத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் 15—9—1981 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மற்றும் அதனைச் சார்ந்த பகுதிகளில் நவீன முறையில் பட்டுப் பூச்சி வளர்க்கும் திட்டம்,

* வினா எண் 702—திரு. இரா. தாமரைக்கனி, திரு. ப. வெங்கட சுப்பிரமணியம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு மாவட்டம் காஞ்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் நவீனமுறையில் பட்டுப்பூச்சி வளர்ப்பு திறனைப் பெருக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள காஞ்சிபுரம் மற்றும் அதனைச் சார்ந்த பகுதிகளில் பட்டு வளர்ப்பினை பெருக்குவதற்கு என்று தனியாக திட்டம் ஏதும் இல்லை. ஆனால் தமிழ் நாடு முழுவதும் செயல்படுத்தப்படும் நவீன பட்டு வளர்ப்புத் திட்டங்கள் இப்பகுதியிலும் அமூல் படுத்தப்படுகின்றன. மேலும் இப்பகுதியில் உள்ள பட்டு விவசாயிகளுக்கு நவீன பட்டு வளர்ச்சி பயிற்சி கிடைக்க காஞ்சிபுரத்தில் ஒரு முன்னோடி மற்றும் சேவை நிலையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுப்பூசசி வளர்ப்புத் திறனை அதிகப்படுத்த, அதற்குப் புதிய முறைகளை அறிந்து செயல்படுத்த, தேர்ச்சி பெற்ற விவசாயிகள் ஜப்பான் நாட்டுக்குப் பயிற்சி பெற்று வர அனுப்பப்படுவார்களா? மேலும் ஜப்பான் நாட்டிலேயிருந்து, பட்டுப்பூச்சி வளர்ப்பிலே தேர்ச்சிப்பெற்ற விஞ்ஞானிகள் வரவழைக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.